# 3.2 தூய ஆவியார் தரும் வளர்ச்சி






தூய ஆவியாரின் உதவியின் மூலம் திருத்தூதர்கள் மிகவும் சிறப்பாக நற்செய்திப் பணியை மேற்கொண்டார்களென்பதை இப்படம் விளக்குகின்றது.



இவ்வாறு மன்றாடியவுடன் அவர்கள் கூடியிருந்த இடம் அதிர்ந்தது. அவர்கள் அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவர்களாய்க் கடவுளின் வார்த்தைகளைத் துணிவுடன் எடுத்துக் கூறினர்.

(திருத்தூதர் பணி 4:31)



இலவச விநியோகத்திற்காக

போதிய கல்வியறிவு இல்லாத பாமர மக்களாகிய பேதுரு, யோவான் போன்றவர்கள் தூய ஆவியைப் பெற்றுச் செயற்பட்ட விதம் வியப்புக்குரியதாகும். திருத்தூதர்கள் தூய ஆவியின் வல்லமையினூடாகப் பெற்றுக் கொண்டவைகள்

- ☞ நம்பிக்கை
- ☞ தூய்மை
- ☞ ஞானம்
- ☞ தன்னம்பிக்கை
- ☞ பேச்சுத்திறன்
- ☞ துணிவு

அத்துடன் தூய ஆவியார் மூலம் திருதூதர்களுக்கு சிறப்புக் கொடைகளும் கிடைத்தன. அக்கொடைகளின் மூலம் எவ்வித பயமுமின்றி உயிர்த்தெழுந்த இயேசுவைக் குறித்து சாட்சி கூறினர். இறையரசின் நற்செய்தியைப் போதித்தனர்.

## இயேசு கிறிஸ்துவும் தூய ஆவியாரின் செயற்பாடும்

மத்தேயு 3:16 வசனத்திற்கேற்ப தூய ஆவியார், ஆண்டவர் மீது புறாவைப்போல இறங்கினார். தூய ஆவியார் மூலம் இயேசு கிறிஸ்து வழி நடத்தப்பட்டார். தூய ஆவியின் மூலமாக இறையரசின் விழுமியங்கள் நிறைவேறின.

தூயஆவியார், இயேசு கிறிஸ்துவே உண்மையான மெசியா என்பதை உலகுக்கு வெளிப்படுத்தினார். அவரின் நோக்கத்தை நிறைவேற்ற தூய ஆவியாரின் தாமே இறங்கினார். அவ்வேளை கடவுள் தாமும் ஆண்டவர் இயேசு குறித்த தமது சாட்சியை முன் வைத்தார்.



என் அன்பார்ந்த மைந்தர் இவரே;
இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்.
மத்தேயு 3:17

ஆண்டவர் இயேசு தூயஆவியாரின் செயல்பாட்டைக் குறித்து கூறியதை வாசித்துப் பார்ப்போம். யோவான் 16 : 4-15

தூய ஆவியார் நமக்கு எடுத்துக் காட்டும் உண்மைகளைக் காண்போம்.
1. பாவம் 2. நீதியான வாழ்வு 3. நடுத்தீர்வு (யோவான் 16:8)

**மனனம் செய்க.**

*உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் வரும்போது அவர் முழு உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார்*


*(யோவான் 16:13)*

இயேசு கிறிஸ்து இறையரசு சார்ந்த தமது பணிகளின் பொழுது சோதனைகளை எதிர்நோக்கினார். ஆனாலும் தமக்குக் கிடைத்த தூய ஆவியின் வல்லமையைத் தவறாகப் பயன்படுத்தாமல் செயல்பட்டு, தமக்கு நேரிட்ட சோதனைகளை வென்றார். இறையரசின் வருகையை வெளிப்படுத்த தூய ஆவியாரின் செயல்பாடுகளைப் பயன்படுத்தினார்.

## திருத்தூதர்களும் ஆவியாரின் செயற்பாடுகளும்


பேதுருவின் முதலாவது அருளுரை நம்மை வியப்புக்குள்ளாக்குகிறது. ஒரு கால கட்டத்தில் இயேசுவை மூன்று தடவைகள் மறுதலித்த பேதுரு பின்பு இயேசு கிறிஸ்துவை குறித்துப் பயமில்லாமல் துணிவுடன் போதித்தார். பேதுருவின் முதலாவது அருளுரையில் ஏறத்தாழ மூவாயிரம் பேர் மனந்திரும்பியமை பேதுரு தூய ஆவியின் வழிநடத்தலைப் பெற்றுக் கொண்டதன் பெறுபேறு ஆகும். அதேபோல் திருத்தூதர்பணி 3 இல் கூறப்பட்டுள்ளவாறு பேதுரு தூய ஆவியாரைக் கொண்டு செயல்பட்டார்.

திருத்தூதர் பணிகள் 4 : 4 இல் ஐயாயிரம் பேரளவில் மனம் திரும்பினார்கள். அத்துடன் அவரது அருளுரையைக் கேட்கும் போதெல்லாம் மக்கள் தூய ஆவியாரின் நிறைவால் நிரப்பப்பட்டார்கள். யூதரல்லாதோர் மத்தியிலும் தூய ஆவியாரின் வழிநடத்தல் இருந்தது.



இக் கொடைகள் இறையரசின் மக்களுக்குச் சேவை செய்வதற்கும் இறை நம்பிக்கையை வளர்த்துக் கொள்வதற்கும் உதவும். நாம் கிறிஸ்தவர்கள் என்ற ரீதியில் இறையரசின் கட்டுக் கோப்புக்குள் அடங்கிப் பணிபுரிய வேண்டும். ஊனுடல் தேவைகளுக்கு அடிபணிவதை விட, நற்செய்தியைக் கூறுவதே நமக்கு சிறப்பான பணியாய் அமைந்துள்ளது.

## ஆவியார் நம்மில் பிறப்பிக்கும் கனிகள் - கலா 5 : 22




இயேசு கிறிஸ்துவின் மலைப்பொழிவின்படி இறையரசில் இணையும் நம்மிடையே இருக்க வேண்டிய தன்மைகளைக் கீழே காணலாம். இத்தன்மைகளை முழுமைப்படுத்த தூய ஆவியார் துணை புரிகிறார்.

**இறையரசின் தன்மைகள்**

- எளிமையான வாழ்வு
- மனம் வருந்துதல்
- சமத்துவ மனப்பான்மை
- இரக்கம்
- தூய்மை
- நீதி
- நேர்மை



இலவச விநியோகத்திற்காக

**பின்வரும் திருவிவிலிய வசனங்களை வாசித்து இடைவெளிகளை நிறைவு செய்யவும்.**

**தூய ஆவியாரின் வல்லமையைப் பெற்று செயற்படுவோர்**

திரு.பணி 2:4 வெவ்வேறான மொழிகளில் பேசினார்கள்.

திரு.பணி 2 :17-21 ...............................................

திரு.பணி 3 :1-10 ...............................................

திரு.பணி 4 :4 ...............................................

திரு.பணி 4 :9-20 ...............................................

திரு.பணி 5 :16 ...............................................

திரு.பணி 7:55-56 ...............................................

**நம்பிக்கை கொண்டோரின் அடையாளங்கள்**

- கடவுளுக்குத் துதி செலுத்துதல்
- கடவுளுக்காக நேரம் செலவிடுதல்
- செபித்தல்
- ஒருமனப்படுதல்
- சாட்சி பகருதல்
- திருவிருந்தில் கலந்து கொள்ளுதல்
- வளங்களைப் பொதுவாக அனுபவித்தல்
- கற்றுக் கொடுத்தல்
- பகிர்ந்துண்ணல்
- போதனைகளைக் கேட்டல்

(திருத்தூதர் பணி 2:42-47)

ஆண்டவர் இயேசுவை நம்பும் அனைவரும் தூய ஆவியாரின் கொடைகளைப் பெற்றுக் கொள்வர். இவ்வாறு தூய ஆவியாரின் கொடைகளைப் பெற்றுக் கொண்ட மாணவர்களாகிய நீங்கள் செயல்பட வேண்டிய விதத்தைச் சிந்தித்துப் பாருங்கள்.



இலவச விநியோகத்திற்காக

## கொடைகள் மூலம் சமூகப் பணி

நம் அழைப்பையும் கொடைகளையும் அறிந்து கொண்டு சமூக வளர்ச்சிக்கு நாம் பங்களிப்புச் செய்ய வேண்டும். கடவுள் நமக்கு பல கொடைகளை வழங்கியுள்ளார். அவற்றை வளர்த்துக் கொண்டு நாம் சமூகமாக இறையாட்சியின் மகிமைக்கு நம்மைப் பயன்படுத்த வேண்டும். இயேசு கிறிஸ்து கூறிய தாலந்துகளைப் பற்றிய உவமை நமக்கு சிறந்த விளக்கத்தை அளிக்கிறது. நமது தாலந்துகளை வளர்த்துக் கொள்ள இவ்வுவமை ஊக்கமளிக்கிறது.

கல்வியறிவற்றோருக்கு - கல்வியறிவும்
ஏழையருக்கு - பொருள் உதவியும் செய்தல்
வேண்டும்.

மீத்திறனற்ற குழந்தைகளின்
தாலந்துகள் இனங்காணப்படல் வேண்டும்.
அவர்களுக்கு உதவுதல் வேண்டும்.

போதைப்பொருட்கள், களவு என்பவற்றிற்கு
அடிமையானவர்கள் விடுதலையடைய
அன்பு, இரக்கம் காட்டுதல் வேண்டும்.

**பவுலடியார் திருப்பணிக்கான பல்வேறு பணிநிலைகளைப் பற்றி கூறுகிறார்.**

அவை **இறைத்தூதர், இறைவாக்கினர், நற்செய்தியாளர், ஆயர், போதகர்,** எனப்படும். இப்பணியாளர் மூலம் இறைமக்களை ஆயத்தப்படுத்தவும், கிறிஸ்துவின் உடலைக் கட்டி எழுப்பவும் கடவுள் திட்டமிட்டார்.



எபே. 4 : 11, 12
வசனங்களை வாசித்து
கலந்துரையாடுங்கள்

மக்கள் ஒவ்வொருவருக்கும் ஏதேனும் ஓர் கொடையாவது கடவுளால் கொடுக்கப்பட்டுள்ளது. தங்களுக்கான கொடையை இனங்கண்டு வீட்டில், வகுப்பில், பாடசாலையில், சமுதாயத்தில் பணியாற்றுவது முக்கியமாகக் கருதப்படுகின்றது. இதுவே இறையரசின் வளர்ச்சிக்கான பணியாகும்.


இலவச விநியோகத்திற்காக

### இறையரசில் தூய ஆவியாரின் ஈடுபாடு

இறையாட்சி என்பது முழு உலகிலும் இறைவனின் சித்தப்படி நடைபெறும் ஆளுகை ஆகும்.

இறையரசின் அடித்தளம்
- நீதி
- நேர்மை
- சமத்துவம்

முழு சமூகமும் விடிவை நோக்கிச் செல்ல பாடசாலைக் காலத்தில் அல்லது இளமைப்பருவத்தில் தூய ஆவியாரைப் பெற்று, தாலந்துகளைப் பயன்படுத்தி அர்ப்பணிப்புடன் இறையரசின் வளர்ச்சிக்கு உதவுவோம்.

### மனதில் பதிய வைப்போம்

+ பாடசாலையிலும் சமூகத்திலும் அர்ப்பணிப்புடன் செயல்படும் ஒருவராக மாறுவோம்.
+ மாணவர்கள் மத்தியில் பொதுநலத்துடன் ஒன்றுபட்டுச் செயல்படுவோம்.
+ போட்டி மிகுந்த உலகில் சமரசத்துடன் செயல் படுவோம்.

### செயல்பாடு

*1. உமது பாடசாலையில் மற்றும் வகுப்பில் சகோதரத்துவத்தை வளர்ப்பதற்கு புதிய திட்டம் ஒன்றை எடுத்துரைக்கவும்.*

*2. (i) உங்கள் பாடசாலையின் சமூகப்பணி மன்றத்தின் செயலாளர் என்ற ரீதியில் நீர் மேற்கொள்ளும் செயல் திட்டங்களைக் கூறுக.*

*(ii) மேற்கூறிய ஏதாவது ஒரு திட்டத்தை எவ்வாறு நடைமுறைப் படுத்துவீர் என்பதை விளக்குக.*

*3. திருவிவிலியத்தில் தூய ஆவியார் தோன்றிய முக்கிய நிகழ்வுகள் யாவை?*